IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No. 404/2018

Deposition of Witness for PW1.

Name : திரு. சுஜிர்த்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.01.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி. எனது கூடுதல் முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன்.

10ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது சகோதரி சுப்ரியா குலசேகரம் சாரதா கிருஷ்ணா ஹோமியோ மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 3 மாதங்களாக உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்தார். அவ்வாறு சிகிட்சையில் இருந்தபோது ஒவ்வொருநாளும் உடல்நிலை பலகீனமாகி, 18.03.2017 அன்று அவர் காலமானார். அவர் சிகிட்சையில் இருந்த அந்த 3 மாத காலகட்டத்தில் அவர் அந்த மருத்துவமனையில் இருந்து வெளியில் எங்கும் செல்லவில்லை என்றால், சரிதான். அந்த சமயத்தில் சுப்ரியாவின் கணவர் ஆரோக்கியமாக இருந்தார் என்றால், சரிதான். பின்பு எனது சகோதரி சுப்ரியாவின் கணவர் எவ்வாறு இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அவரும் கேன்சர் வியாதியினால் அவதிபட்டு பல மாதங்கள்

மருத்துவமனையில் சிகிட்சையில் இருந்து பின்னர் இறந்தார் என்றால், அவ்வாறு சொன்னார்கள். எனது சகோதரிக்கு திருமணம் 12.05.1991ல் நடந்தது. எனது சகோதரி அரசு பள்ளி ஆசிரியை, அவரின் கணவர் ஜெயன் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியில் இருந்தார். அவர்கள் இருவரும் நன்றாக வாழ்ந்த காலகட்டத்தில் என்னுடன் சுமூகமான உறவு நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கும் , எனக்கும் எந்தவிதமான கொடுக்கல் , வாங்கலும் கிடையாது என்றால், சரிதான். எனக்கு இரண்டு மகள்கள் , அதுல்யா கிருஷ்ணா, ஐஸ்வர்யா கிருஷ்ணா உண்டு. எனது மகள் அதுல்யா கிருஷ்ணா , சுப்ரியா பெயரில் இருந்து ஆயுள் காப்பீடு முதிர்வு தொகையை குறித்து சிவில் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கு பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.179/2017 ஆக இருந்து கடந்த 18.08.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படுவது அதன் தீர்புரை என்றால், சரிதான். அதன் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ–1 ஆகும். அந்த வழக்கில் எனது மகள், தான் சுப்ரியாவின் வளர்ப்பு மகள் என்று சொல்லி வழக்கு செய்தார் என்றால், சரிதான். அந்த வழக்கில் எனது மகள் சுப்பிரியாவின் வளர்ப்பு மகள் என்று தெளிவாகவில்லை என்று குறிப்பிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதற்கு மேல் நாங்கள் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனது சகோதரியின் சம்பளம் சம்பந்தமாக WP No.19770/2017 தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அதில் அரசையும், அரசு கல்வி அதிகாரிகளையும் எதிர்மனுதாரர்களாக சேர்த்திருந்தேன் என்றால், சரிதான். அந்த வழக்கை நான் திரும்ப வாபஸ்

பெற்றுக்கொண்டேன் என்றால், சரிதான். என் மகள் தாக்கல் செய்த அ.வ.179/2018 மற்றும் WP No.19770/2017 பற்றிய விபரங்களை நான் இந்த வழக்கில் குறிப்பிட்டிருக்கிறேன். சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Writ மனு உயில் பற்றியது அல்ல என்றால், சரியல்ல. உயிலுக்கு பத்திரம் வாங்கியது யார் என்ற விபரம் எனக்கு தெரியாது. உயில் யாரால் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. உயில் எழுதுவதற்கு ஆவணங்கள் கொடுத்து யார்என்ற விபரம் எனக்கு தெரியாது. மருத்துவமனையில் இருக்கும் போது எனது சகோதரி தன்னுடன் ஆவணங்கள் எதையும் வைத்திருக்கவில்லை என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. மருத்துவமனையில் சிகிட்சை சம்பந்தப்பட்ட ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் அவர் வசம் இருந்ததா என்ற விபரம் எனக்கு தெரியாது. உயிலில் எனது சகோதரி கையொப்பம் செய்த விபரம் எனக்கு தெரியாது. உயிலில் உள்ள கையொப்பம் மற்றும் கை நாட்டு பற்றி எனக்கு தெரியாது என்றால், அது என்னுடைய சகோதரி சுப்ரியாவின் கைகொப்பம் மற்றும் கைரேகை போலதான் உள்ளது. உயில் எனக்கு எனது சகோதரி இறப்பதற்கு முந்தின நாள் கிடைத்தது. எனக்கே மேற்படி உயில் பற்றி தெரியாத நிலையில், எனது மனைவி அல்லது மகள்கள் மற்றும் உறவினர்களுக்கு அந்த உயில் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றால், சரிதான். அதில் சாட்சி கையொப்பம் யார், எப்பொழுது, எவ்வாறு போட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். எனக்கு தெரிந்தவரையில் மேற்படி உயில் எந்த சூழ்நிலையில் எதற்காக எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால், எனது தங்கை சுப்ரியா தனது அரை பாகத்தை எனக்கு

தரவிரும்புவதாக என்னிடம் கூறி, மற்ற அரை பாகத்தை தகது கணவருக்கு இதே உயிலில் எழுதி வைத்துள்ளதாக கூறி, அந்த உயிலை என்னிடம் கொடுத்தார். உயில் சம்பந்தமாக உள்ள சொத்துகளின் சர்வே எண்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால், அந்த சமயத்தில் தெரியாது. எனக்கு சுப்ரியா என்ற ஒரே தங்கை தான் உண்டு. இந்த உயிலை யார் எழுதியிருப்பார் என்ற விபரம் எனக்கு இதுவரை தெரியாது என்றால், சரிதான். உயிலை முறையாக Probate செய்யவில்லை என்றால், சரிதான். உயில் சம்பந்தப்பட்ட சொத்து , எவ்வாறு தற்போது உரிமை மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தற்போது தான் தெரியும். எனது தங்கையின் கணவர் வழக்கு நடந்துகொண்டிருக்கும்போதே அவரின் சித்தப்பா பிள்ளைகளாகிய, இந்த வழக்கின் 5 முதல் 7 பிரதிவாதிகள் பெயரில் உயில் எழுதி வைத்திருக்கிறார். இந்த வழக்கில் 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால், சரிதான். உயில்படி எனக்குள்ள பாகத்தைகேட்கிறேன். மீதிபாகம் யாரிடத்தில் உள்ளது என்றால், மலர்விழி என்பவருக்கு 5 முதல் 7 பிரதிவாதிகள் விலைகிரையம் செய்துவிட்டார்கள். மலர்விழியை கட்சி சேர்த்திருக்கிறேன். அவருக்கு எதிராக பரிகாரம்கோரவில்லை என்றால், சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.